# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. கிழக்கே வங்காள விரிகுடா

2. மேற்கே கேரளா

3. வடக்கே ஆந்திரப்பிரதேசமும், வடமேற்கே கர்நாடகாவும்

4. தெற்கே இந்தியப் பெருங்கடலும் தமிழ் நாட்டின் எல்லைகளாக அமைந்துள்ளன.

2) ‘தேரி’ - என்றால் என்ன?

**பதில் :** இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் "தேரி" என்று அழைக்கப்படுகின்றன.

3) கடற்கரைச் சமவெளி எவ்வாறு உருவாகிறது?

**பதில் :** 1. தமிழ்நாட்டின் கடற்கரைச் சமவெளியானது கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாக்கப்பட்டுள்ளதாகும்.

2. இச்சமவெளி கோரமண்டல் அல்லது சோழமண்டல சமவெளி (சோழர்கள் நிலம்) என அழைக்கப்படுகிறது.

3. இச்சமவெளி சென்னை முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. இது சில இடங்களில் 80 கிலோ மீட்டருக்கும் அதிகமான அகலத்துடன் காணப்படுகிறது.

4. இது உயரமான கடற்கரை என்றாலும் சில பகுதிகள் கடலில் மூழ்கியுள்ளன.

4) தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக

**பதில் :** 1. பாம்பன் தீவு

2. குருசாடி தீவு

3. நல்லதண்ணித் தீவு

4. காட்டுப்பள்ளி தீவு

5. புள்ளிவாசல் தீவு

6. ஸ்ரீரங்கம் தீவு

7. முயல் தீவு

8. விவேகானந்தர் நினைவுப் பாறை

9. உப்புதண்ணி தீவு நிலங்கள்

10. கொய்யில் தீவு

5) தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக.

**பதில் :** 1. காரையாறு

2. கடனாநதி

3. மணிமுத்தாறு

4. சித்தாறு

5. பச்சையாறு

6. இராமநதி

7. சேர்வலாறு

6) பேரிடர் அபாய நேர்வு குறைப்பு - வரையறு.

**பதில் :** 1. உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் இயற்கையினால் ஏற்படும் பேரழிவு பேரிடர் எனப்படுகிறது.

2. ஐக்கிய நாடுகள் சபையின் அபாய நேர்வு குறைப்பு அமைப்பின் கூற்றுப்படி, அபாய குறைப்பு என்பது பேரிடருக்கான காரணங்களை முறையாக கண்டறிந்து பேரிடரின்போது அதன் தாக்கங்களைக் குறைப்பதாகும்.

3. இது இடர் உண்டாகும் இடங்களைத் தவிர்த்தல், மக்களின் உயிர் மற்றும் உடைமைகளின் பாதிப்பினை குறைப்பது,

நில மேலாண்மை, சூழ்நிலை மேலாண்மை, எதிர் விளைவுகள் குறித்த தயார் நிலை மற்றும் எச்சரிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

7) புயலின்போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது.?

**பதில் :** 1. மீனவர்கள் கூடுதலான மின்சாதனங்களுடன் (பேட்டரிகள்) ஒரு வானொலிப் பெட்டியை வைத்திருத்தல் வேண்டும்.
2. அதன் மூலம் அவ்வப்போதைய வானிலை நிலைமைகளைக் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.
3. புயலின்போது கடலுக்குச் செல்வதைத் தவிர்த்து படகுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.
4. வதந்திகளை நம்பாமல் அமைதியாகவும் பதற்றமடையாமலும் இருத்தல் வேண்டும்.

8) தமிழ்நாட்டில் காணப்படும் மண் வகைகள் யாவை?

**பதில் :** 1) தமிழ்நாட்டில் காணப்படும் மண் வகைகள் அதன் பண்புகளின் அடிப்படையில் 5 பிரிவுகளாக பிரிக்கலாம்.
2) அவை வண்டல் மண், கரிசல் மண், சிவப்பு மண், சரளை மண் மற்றும் உவர் மண்ணாகும்.

9) தமிழ்நாட்டில் காணப்படும் காடுகளை வகைபடுத்துக.

**பதில் :** தமிழ்நாட்டில் காணப்படும் காடுகள்
1) பசுமைமாறாக் காடுகள்
2) இலையுதிர்க் காடுகள்
3) சதுப்புநிலக்காடுகள்
4) முட்புதர்க் காடுகள் மற்றும்
5) வெப்பமண்டல மலைக் காடுகள்

10) கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள முக்கிய குன்றுகள் யாவை?

**பதில் :** கிழக்குத் தொடர்ச்சி மலையில் முக்கிய குன்றுகள் ஜவ்வாது, சேர்வராயன், கல்வராயன், கொல்லி மலை மற்றும் பச்சை மலை ஆகும்.

11) மண் என்றால் என்ன? அதை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

**பதில் :** 1) மண் என்பது வானிலைச் சிதைவு மற்றும் அரிப்பினால் பாறைகள் சிதைந்து உருவாகும் துகள்களாகும்.
2) மண்ணின் தன்மை அப்பகுதியில் நிலவும் தாவர மூட்டம் போன்ற காரணிகளை சார்ந்துள்ளது.

12) சதுப்புநிலத் தாவரங்கள் எவ்வாறு கடல் பாதுகாப்பு மேலாண்மையில் பங்கு வகிக்கின்றன?

**பதில் :** கடல் அலைகள் மற்றும் புயலால் ஏற்படும் பாதிப்பில் இருந்து கடற்கரைப் பகுதிகளை பாதுகாக்கின்றது. மேலும் பவளப்பாறைகளையும், கடலோர புல்வெளிகளையும் மணல் பதிவுகளால் மூழ்கடிக்கப்படாமல் பாதுகாக்கின்றது.

13) தமிழகத்தில் அமைந்துள்ள மேற்கு தொடர்ச்சி மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளின் மலைவாழிடங்களின் பெயர்களைக் கூறுக.

**பதில் :** மேற்கு தொடர்ச்சி மலைகளின் மலைவாழிடங்கள்:
1. ஊட்டி
2. குன்னூர்
3. வால்பாறை
4. கொடைக்கானல்
5. மேகமலை
6. கழுகுமலை
7. குரங்கனி.

14) ஊட்டி, மேற்கு தொடர்ச்சி மலைத்தொடரில் அமைந்துள்ளதா?

**பதில் :** ஆம், ஊட்டி நீலகிரி மலையில் அமைந்துள்ள மலைவாழிடமாகும்.

15) பொதிகைமலை பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. பொதிகை மலையின் பெரும்பகுதி திருநெல்வேலி மாவட்டத்திலும் இதன் தென்சரிவு கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமைந்துள்ளது.
2. பொதிகை மலையானது சிவஜோதி பர்வத், அகத்தியர் மலைகள் மற்றும் தெற்கு கைலாயம் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.
3. இப்பகுதி வளமான பசுமை மாறாக்காடுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பழைமையான கோயில்கள் ஆகியவற்றிற்கு புகழ் பெற்றதாகும்.
4. களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகம் இப்பகுதியில் அமைந்துள்ளது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.

**பதில் : காவிரியின் உற்பத்தி:**
1. காவிரி ஆறு கர்நாடகா மாநிலத்தில் கூர்க் மாவட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் பிரம்மகிரி குன்றுகளில் தலைக்காவிரி என்னும் இடத்தில் உற்பத்தியாகிறது.
2. தமிழ்நாட்டில் சுமார் 416 கிலோமீட்டர் நீளத்திற்கு பாய்கிறது. இது கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றிற்கு இடையே சுமார் 64 கிலோமீட்டர் தூரத்திற்கு எல்லையாக உள்ளது.
**நீர்வீழ்ச்சி மற்றும் நீர்த்தேக்கம் :**
தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் என்னும் இடத்தில் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. ஸ்டான்லி நீர்த்தேக்கம் என்று அழைக்கப்படும் மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
**துணையாறுகள்:**
1. பவானி
2. அமராவதி
3. நொய்யல்
**ஸ்ரீரங்கம் தீவு:**
1. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆறு இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. வடகிளை கொள்ளிடம் (கொளேருன்) என்றும் தென்கிளை காவிரியாகவும் தொடர்கிறது. இவ்விடத்திலிருந்து காவிரி டெல்டா சமவெளி தொடங்குகிறது.
2. சுமார் 16 கிலோமீட்டர் தொலைவிற்கு பாய்ந்த பின் மீண்டும் இவ்விரு கிளைகள் இணைந்து ஸ்ரீரங்கம் தீவை உருவாக்குகின்றன.
**காவிரி டெல்டா :**
1. கிராண்ட் அணைகட் என்றழைக்கப்படும் கல்லணை காவேரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
2. இந்த ஆறு கல்லணையைக் கடந்தபின் பல கிளைகளாகப் பிரிந்து டெல்டா பகுதி முழுவதற்கும் ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கியுள்ளது.
3. காவிரி டெல்டாப் பகுதிகளில் கிளை ஆறுகளால் உண்டாகியுள்ள இவ்வலைப் பின்னல் அமைப்பு "தென்னிந்தியாவின் தோட்டம்" என்று அழைக்கப்படுகிறது. பின்னர் கடலூருக்கு தெற்கே வங்கக் கடலில் கலக்கிறது.

17) தமிழ் நாட்டிலுள்ள மண் வகைகளின், பரவல் மற்றும் அவற்றின் பண்புகளை விளக்குக

**பதில் : மண் வகைகள்:**

தமிழ்நாட்டில் காணப்படும் மண்ணை அதன் தன்மைகளைக் கொண்டு ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை

1) வண்டல் மண்,

2) கரிசல் மண்,

3) செம்மண்,

4) சரளை மண்,

5) உவர் மண் என்பவனவாகும்.

**வண்டல் மண்:**

1. வண்டல் மண் ஆறுகளால் படிய வைக்கப்படும் நுண் படிவுகளால் உருவாகின்றது. வண்டல் மண் ஒரு வளம் மிகுந்த மண்ணாகும்.
2. தமிழ்நாட்டில் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் இம்மண் காணப்படுகிறது.
3. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இவ்வகை மண் அதிகம் காணப்படுகிறது.

**கரிசல் மண்:**

1. தீப்பாறைகள் சிதைவடைவதன் மூலம் கரிசல்மண் உருவாகிறது. இது ரீகர் மண் (Regur Soli) என்றும் அழைக்கப்படுகிறது.
2. இம்மண்ணில் பருத்தி நன்கு வளர்வதால் இது பருத்தி மண் என்றும் அழைக்கப்படுகிறது.
3. மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கரிசல் மண் பெருமளவில் காணப்படுகிறது.

**செம்மண்:**

1. தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு பரப்பளவில் செம்மண் பரவியுள்ளது.
2. இம்மண் குறிப்பாக மாநிலத்தின் மத்திய மாவட்டங்களில் காணப்படுகின்றது.
3. இம்மண் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிகம் காணப்படுகின்றது.

**சரளை மண்:**

1. சரளை மண்ணானது அதில் கரைந்துள்ள சத்துக்கள் அடித்து செல்லப்படுவதால் உருவாகிறது. இது ஒரு வளமற்ற மண்ணாகும்.
2. காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களின் சில பகுதிகளிலும், நீலகிரி மலையின் சில பகுதிகளிலும் இம்மண் காணப்படுகின்றது.

**உவர் மண் :**

1. தமிழ்நாட்டின் சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே இம்மண் காணப்படுகிறது. வேதாரண்யப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் உவர்மண் காணப்படுகிறது.
2. டிசம்பர் 26, 2004இல் ஏற்பட்ட சுனாமி அலைகள் அதிக அளவு மணல் படிவுகளை தமிழக கடற்கரைப் பகுதிகளில் படிய வைத்துள்ளன. இதனால் கடற்கரையில் சிலபகுதிகள் பயிரிட உகந்ததாக இல்லை.

18) புயலுக்கு முன்னரும் பின்னரும் மேற்கொள்ள வேண்டிய அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளை எழுதுக.

**பதில் : புயலுக்கு முன்:**

1. வதந்திகளை நம்பாமல் அமைதியாகவும் பதற்றமடையாமலும் இருத்தல் வேண்டும்.
2. அலைபேசிகள் மின்னூட்டம் செய்யப்பட்டதை உறுதி செய்து, குறுஞ்செய்திகளைப் பெறுதல் வேண்டும்.
3. வானொலி மற்றும் காணொளி பெட்டிகள் மூலம் அவ்வப்போதைய வானிலை நிலைமைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.
4. விலைமதிப்புள்ள பொருட்கள் மற்றும் ஆவணங்களை நீர்ப்புகா கொள்கலன்களில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.
5. அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய அவசரகால மூட்டைத் தொகுப்பை தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.
6. குடியிருப்பு பாதுகாப்பாக இருப்பதையும், சரி செய்வதையும் உறுதி செய்தல் வேண்டும்.
7. கூர்மையான பொருட்கள் வெளிப்பகுதிகளில் இல்லாமல், கால்நடைகள் செல்ல மற்றும் கால்நடைகளின் பாதுகாப்பிற்காக அவற்றை அவிழ்த்து விடுதல் வேண்டும்.
8. மீனவர்கள் கூடுதலான மின் சாதனங்களுடன் (பேட்டரிகள்) ஒரு வானொலி பெட்டியை வைத்திருத்தல், மேலும் கடலுக்குச் செல்வதை தவிர்த்து, படகுகளைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

**புயலுக்குப் பின்:**

1. புயல் நிவாரண மையங்களுக்கு மாற்றப்பட்டால், மறு அறிவுரைகள் வரும் வரை அங்கேயே தங்கி இருத்தல் வேண்டும்.
2. புயலுக்குப் பின் பாம்பு, பூச்சிகளிடமிருந்து எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.
3. கட்டடங்களுக்கு அருகில் உள்ள கழிவுகளையும். விலங்குகளின் இறந்த உடல்களையும் அப்புறப்படுத்த வேண்டும்.
4. இழப்பின் உண்மையான மதிப்பினையும், அளவினையும் உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்த வேண்டும்.

19) பாலைவனமாதல் என்றால் என்ன? தமிழ்நாட்டில் பாலைவனமாதலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து விவரி.

**பதில் :** 1) பாலைவனமாதல் என்பது, வறண்ட, ஓரளவு வறண்ட அல்லது ஈரப்பதம் குறைவாக உள்ள பகுதிகள், காலநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தரம் குறைவதைக் குறிக்கும்.

2) மனிதச் செயற்பாடுகளே இதற்கு முதன்மையாக காரணமாகக் கூறப்படுகின்றது.

3) தற்காலத்தில் பாலைவனமாதல் மிகவும் வேகமாக நடைபெறுகிறது.

4) இது வழக்கமாக மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்ப்படுவதைக் காட்டிலும் வேகமானதாகும்.

**தமிழ்நாட்டில் பாலைவனமாதல் பாதிக்கப்பட்ட பகுதிகள் :**

1) தமிழ்நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்று பாலைவனமாதலாகும்.

2) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்த பாலைவனமாதல் நிலா வரைபடத்தின்படி மொத்த நிலப்பரப்பில் சுமார் 12சதவீத நிலப்பகுதி பாலைவனமாதல் மற்றும் நில சீரழிவுடையதாதல் என்ற இருநிலை கண்டறியப்பட்டுள்ளது.

3) தேனி மற்றும் இராஜபாளையம் பகுதிகளில் சுமார் 1200 ஹெக்டர் நிலம் காற்றாடி மணல் படிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளது.